பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன் வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவை யின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1991) நிறைவேற்றப்பெற வேண்டும்'' எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகமென்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு, திருத்தப்பட்டபடி ஏற்கப்பட்டது.

12.55 மணி

4. அறிவிப்புகள்.

(அ) மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

1991–92ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) பேரவையின் பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்களிட மிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:

1. டாக்டர் அ. செல்லக்குமார்
2. திரு. என். பன்னீர்செல்வம்
3. திரு. எம். சுந்தரசாமி
4. திரு. ஆ. பாலையா
5. திரு. கே. தவசி
6. டாக்டர் வெ. புருஷோத்தமன்
7. திரு. அ. தேவராஜ்
8. திரு. சை. நாகூர் மீரான்
9. திரு. மு. தென்னவன்

10. திரு. செ. ரகுபதி
11. திரு. எஸ். ஆசைமணி
12. திரு. வ. சத்தியமூர்த்தி
13. திரு. ச. காந்திராஜன்
14. திரு. கு. லாரன்ஸ்
15. திரு. நா. சா. பழனிசாமி
16. திரு. வி. தம்புசாமி

எனவே, 1991-92 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப் பெற்றதாக நான் அறிவிக்கின்றேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக் கணக்குக் குழுத் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

பேரவை விதிகளின் 196-வது விதியின் கீழ் திரு. வ. சத்தியமூர்த்தி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஆ) பொதுக் கணக்குக் குழுவிற்கு உறுப்பினர்கள் தேர்வு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1991-92 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Committee on Public Accounts) பதினாறு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்களிடமிருந்து முறைப்படியான வேட்புத்தாள்கள் வரப்பெற்றுள்ளன:—

1. திரு. குமரி அனந்தன்
2. திரு. சி. சுவாமிநாதன்
3. திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்
4. திரு. எஸ். எஸ். ராமசுப்பு
5. திரு. ஏ. சுப்புரத்தினம்
6. திரு. எம். கே. பாலன்
7. திரு. ஏ. கே.சி. சுந்தரவேல்
8. திருமதி இரா. பாண்டியம்மாள்
9. திரு. தே. ஜனார்த்தனன்
10. திரு. கு. சிவசுப்பிரமணியன்
11. திரு. டி. சாத்தையா
12. திரு. எஸ். எம். துரை
13. திருமதி கே. பழனியம்மாள்
14. திருமதி ஆர். சியாமளா
15. திரு. செ. து. வரதராஜன்
16. டாக்டர் எம். கருப்புசாமி